# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● மே 4, 2018 Weekly E-paper ● May 4, 2018


# அரங்கேறும் ஆரியக் கூத்து!

● சுப.வீரபாண்டியன்



எதுவும் நடக்காது மே 3 ஆம் தேதி என்ற எதிர்பார்ப்பின்படி, காவிரி வரைவுத் திட்டம் *(scheme)* என்று பெயருக்கு ஒரு திட்டத்தைக் கூட. உச்ச நீதிமன்றத்தில் அளிக்க மத்திய அரசு மறுத்து விட்டது. கர்நாடகத் தேர்தலுக்காகப் பிரதமர், அமைச்சர்கள் அனைவரும் அங்கு சென்று விட்டனராம். எனவே மேலும் இரண்டு வாரங்கள் கால நீட்டிப்பு கேட்டுள்ளது மோடி அரசு.

தமிழக மக்களுக்கு வெளிப்படையாக ஒரு பச்சைத் துரோகத்தை மத்திய அரசு செய்துள்ளது என்றால், நீதிமன்றமோ, வழக்கையே திசை திருப்பியுள்ளது. கர்நாடக அரசை நோக்கி, உடனடியாக, 4 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டும், இல்லையேல் பின் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்று எச்சரிக்கின்றது.

கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விடவில்லை என்பதுதானே வழக்கு. அதனால்தானே, மத்திய அரசை நாம் அணுகினோம். அங்கும் தீர்வு கிடைக்காமல்தானே நடுவர் மன்றம் அமைந்தது. அதிலும் பயனின்றித்தானே உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. அந்த வழக்கின் இறுதித் தீர்ப்பில் அல்லவா, காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதில்தான், ஸ்கீம் என்றால் என்ன என்று, 'ஒன்றுமே தெரியாத' மத்திய அரசு விளக்கம் கேட்டது.

மீண்டும் முதல் கட்டத்திற்கு வந்து, கர்நாடக அரசைப் பார்த்து, உடனே தண்ணீர் விடு என்றால் என்ன பொருள்? அதுவும் இப்போது அங்கே, அதிகாரமற்ற வெறும் பாதுகாவல் அரசு ***(Care taker government)*** மட்டுமே உள்ளது. இங்கே தண்ணீர் இல்லை, இருந்தாலும் விடுவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்வதற்கு அவர்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும்?

எல்லோருமாகச் சேர்ந்து ஒரு கூத்துப்பட்டறை நடத்துகின்றனர். ஆம், அரங்கேறிக் கொண்டிருக்கிறது 'ஆரியக் கூத்து.' ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## பௌர்ணமி விருது




**பௌ**ர்ணமி அறக்கட்டளை சார்பாக 29.04.2018 அன்று பழநியில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் எழில்.இளங்கோவனுக்கு விருது வழங்கப்பட்டது.

அறக்கட்டளைத் தலைவர் பேராசிரியர் மருத்துவர் ஜெகதீஸ் குமார் தலைமையில் ஆந்திர மாநிலம் ஆனந்தபூர் மாவட்ட ஆட்சியர் க.வீரபாண்டியன் IAS, சென்னை கஸ்டம்ஸ் இணை ஆணையர் சி.மோகன் கோபு IRS, ஆகியோர் இணைந்து பௌர்ணமி விருதை வழங்கினார்கள். அப்பொழுது இரா.விஜயலட்சுமி, தூத்துக்குடி உதவி ஆட்சியர் செ.சரவணன் IAS, சேலம் சுங்கம் / கலால் உதவி ஆணையர் ப.பிரகாஷ் IRS, விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் மருத்துவர் சுப.சித்ரா எம்.டி., பௌர்ணமி பொருளாளர் கே.குருநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

எழில்.இளங்கோவன் எழுதிய ‘மதுரை வீரன் கொலையும் திருமலை நாயகர் மகாலும்’ என்ற நூலின் இரண்டாம் பதிப்பை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேராசிரியர் இராமஜெயம் வெளியிட, ஆவணப் பட இயக்குநர் பாலாவும், தங்கப்பிரகாசும் பெற்றுக்கொண்டனர்.

உள்படம் ஆட்சியர் க.வீரபாண்டியனுடன் எழில்.இளங்கோவன்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இன்னுமா தூக்கம்? விழி! எழு!

**‘நீட்’** என்ற தேர்வை தமிழர்கள் தலையில் திணித்தது போதாது என்று, அதன் மூலம் தமிழ் மாணவர்களைத் தேர்வு எழுத விடாமல் செய்யும் முயற்சியிலும், மத்திய அரசின் சி.பி.எஸ்.சி. இறங்கியுள்ளது.

திருநெல்வேலி, கன்னியாகுமாரி, மதுரை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களின் மாணவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் தேர்வு மையங்களை அவர்களுக்கு அமைத்துள்ளது மத்திய சி.பி.எஸ்.சி.

அதாவது தமிழக மாணவர்கள் கேரளாவின் எர்ணாகுளம், ஆந்திராவின் ஐதராபாத், கர்நாடக ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் போய் நீட் தேர்வு எழுத வேண்டும் என சி.பி.எஸ்.சி. ஆணையிட்டுள்ளது.

ஏழை நடுத்தர மக்களுக்குப் பொருளாதாரச் சிக்கலோடு, முன்பின் எந்தத் தொடர்பும் இல்லாத மாநிலங்களில் சென்று தேர்வு எழுதுவதில் இருக்கும் சிரமங்களையும், மன உளைச்சல்களையும் மத்திய அரசு புரிந்துக்கொள்ளவில்லை.

தமிழகம் தவிர்த்த ஏனைய அனைத்து மாநிலங்களிலும் மாணவர்கள், அந்தந்த மாநிலங்களிலேயே தேர்வு எழுத வகைசெய்யப்பட்டுள்ளது.

தமிழக மாணவர்களின் கல்வியில் இப்படிப்பட்ட பேரிடி வீழ்ந்ததைச் சென்னை உயர்நீதிமன்றம் தடைசெய்தும், உச்சநீதிமன்றம் மாணவர்களின் கல்வி நலனைக் கருதாமல் ‘காலம் இல்லை’ என்று சாக்கு சொல்லி சி.பி.எஸ்.சி.க்குத் துணைபோயிருக்கிறது.

காவிரி நீரில்தான் தமிழக மக்களுக்கு மத்திய அரசு துரோகம் செய்கிறது என்றால், கல்வியிலும் தமிழக மாணவர்களுக்குப் பச்சை துரோகம் செய்து கொண்டிருக்கிறது. இது வன்மையான கண்டனத்திற்குரியது.

வெந்ததைத் திண்போம், விதிவந்தால் சாவோம் என்ற வறட்டு வேதாந்தத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, அடுத்த தலைமுறைக்காக இப்பொழுது போராட வேண்டிய அவசியத்தை மத்திய அரசு ஏற்படுத்திவிட்டது.

இப்போது இல்லை என்றால், எப்போதும் இல்லையென்றாகிவிடும்.

மாணவர் சமுதாயத்தின் கல்வி நலன் பாதிக்கப்படக் கூடாது என்பதை அவர்கள் உணர்ந்தால் - விடிவு கிடைக்கும்.

## கேலிக் கூத்தாகும் கூட்டுறவுத் தேர்தல்கள்

**● வெற்றிச்செல்வன்**

**ம**க்களால் மக்களுக்காக நடத்தப்படும் அமைப்புகளில் முதன்மையானது கூட்டுறவுகள். பழங்காலங்களில் பணப்புழக்கம் மிகுந்தவர்களின் அநியாய வட்டியிலிருந்து சாமானியனைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டது கூட்டுறவு இயக்கம். நூறாண்டுக்கும் மேலாகத் தழைத்து வந்த இயக்கம் தற்போதைய ஆட்சியாளர்களின் பேராசையால் நலிந்து வருகின்றது.

கூட்டுறவுகளை அதிகார வர்க்கம் நிர்வகிக்காமல் அதன் உறுப்பினர்களே நிர்வகிக்கும்போது மட்டுமே உண்மையான ஜனநாயகம் மலரும் என்ற எண்ணத்திலேயே கூட்டுறவுத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 18,435 கூட்டுறவு சங்கங்களுக்குத் தற்போது தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. ஒரு சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களை (11 பேர்) மட்டுமே சங்க உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பார்கள். தலைவரையும் துணைத் தலைவரையும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்வார்கள்.

ஆனால் இந்நடைமுறைகள் அனைத்தையும் கேலிக் கூத்தாக்கியிருக்கிறது தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேர்தல். தேர்தலையே நடத்தாமல் ஒவ்வொரு சங்கத்திற்கும் 11 பேர் கொண்ட பட்டியலை தேர்தல் அலுவலரிடம் கொடுத்து அறிவிக்குமாறு ஆளுங்கட்சியினர் வற்புறுத்துவது, எதிர்க்கட்சி வேட்பாளர்களின் வேட்பு மனுவை நிராகரிக்கச் சொல்லி மிரட்டுவது போன்ற பல தகிடு தத்தங்கள் நடந்து வருகின்றன. தேர்தல் அலுவலர்கள் கடத்தப்படுவது போன்ற அவலங்களும் நடந்தேறியுள்ளன.

தேர்தல் முறைகேடுகளுக்குப் பல உயர் அதிகாரிகளே உடந்தையாகவும் உள்ளனர் என்பது வெட்கக்கேடு. முறையாகத் தேர்தல் நடத்தப்படும் சூழலில் ஆளுங்கட்சி ஜெயிக்க இயலாது என்பதால் இத்தகைய குறுக்கு வழியில் அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கிறது அடிமை அ.தி.மு.க. அரசு. இதில் பலிகடா ஆகப்போவது தேர்தல் அலுவலர்கள் மட்டுமே.

இரு கட்டத் தேர்தல்கள் ஏற்கனவே முடிவடைந்த நிலையில், தேர்தல் நடைமுறைகளில் பாரபட்சம் காட்டப்படுவதாக தி.மு.க. எம்.எல்.ஏ. சக்கரபாணி தொடர்ந்த வழக்கை விசாரித்த மதுரை ஐகோர்ட்டு கிளை, தேர்தல் பணிகளை நிறுத்தி வைக்கவும், 3, 4 மற்றும் 5வது கட்டத் தேர்தல்களை நடத்தத் தடை விதித்தும் உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையம் சார்பில் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், மதுரை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்குத் தடை விதித்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்த உத்தரவிட்டது. ஆனால், தேர்தல் முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு என்னும் ஜனநாயக நிறுவனத்தின் மாண்புகளைக் குலைக்கும் வண்ணம் ஆளும் அ.தி.மு.க. அரசு செயல்பட்டு வருவது வெட்கரமானது. கண்டனத்திற்குரியது. ●



# ஆயிரம் கரங்கள் மறைத்தாலும் ஆதவன் மறைவதில்லை!

● உதயகுமார்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்"

என்று பாரதியார் பாடினார். ஆனால் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள குடியரசுத் தலைவர் விருதுக்கான அறிவிப்பில் தமிழ் மொழியை எங்கும் காணமுடியவில்லை.

சமஸ்கிருதம், பாலி / பிராகிருதம், அரபி, பாரசீகம், செம்மொழி தகுதி பெற்ற ஒடியா, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் சிறந்த அறிஞர்களுக்கு விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படி அப்பட்டமாகத் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

தமிழை 'நீச' பாஷையாகக் கருதும் கொள்கை கொண்ட மத்திய ம(னி)த வள மேம்பாட்டுத் துறை அமைச்சகம் இப்படித்தான் செய்யும். பா.ஜ.க ஆட்சிக்கு வந்தது முதல் திருவள்ளுவர் தொடங்கி தமிழ்த்தாய் வாழ்த்து வரை தமிழை முடிந்த அளவிற்கு அவமதிப்பு செய்திருக்கிறார்கள்.

ஆண்டாள் விவகாரத்தில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாகக் குதித்தவர்கள் இப்போது ஆளே காணவில்லை. தெய்வத்தமிழ் ஆன்மிகத் தமிழ் என்று மொழிக்கு உரிமை கொண்டாடியவர்களின் உண்மை முகம் இப்போது மீண்டும் உலகிற்குத் துலங்கியிருக்கிறது.

தமிழை, தமிழர்களை அவமதிக்கும் போக்கு கொண்ட மத்திய அரசை எதிர்த்துத் தமிழ்நாட்டில் ஆட்சியில் அமர்ந்திருப்போர் ஒரு நாள் எழுந்து குரல் கொடுப்பார்கள் என்று நாம் எண்ணுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதே ஆகும். மத்திய அரசின் இந்தப் போக்கைத் தமிழ்நாட்டின் பல்வேறு தலைவர்களும் கண்டித்திருக்கிறார்கள். இந்தக் குரல் தமிழ்மொழிக்கு மட்டுமானது அல்ல. சமஸ்கிருத / இந்தி ஆதிக்கத்திற்குள் நசுங்கும் மற்ற மொழிகளுக்குமானது.

உலகமெல்லாம் போற்றப்படும் தனிச்சிறப்பு வாய்ந்த தமிழ்மொழி இங்கு மட்டும் புறக்கணிக்கப்படுகிறது. ஆயிரம் கரங்கள் மறைத்தாலும், ஆரியம் போல் உலகவழக்கழிந்து ஒழிந்து சிதையா சீரிளமைத் திறம் கொண்ட தமிழ் என்னும் ஆதவனை மறைக்க முடியாது. ●

## கறுப்பும் காவியும்

**தோ**ழர் சுபவீ எழுதிக்கொண்டிருக்கும் "கறுப்பும் காவியும்" என்னும் தொடர் ஒன் இந்தியா (One India) இணையத் தளத்தில் வெளிவந்து கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் சித்தாந்தங்கள் இல்லாத அரசியல் வளர முயற்சிக்கும் இவ்வேளையில், சித்தாந்தங்களின் தேவை குறித்தும், திராவிட இயக்க அரசியலும், மதவாத அரசியலும் எப்படி நேர் எதிரானவை என்பது குறித்தும், வரலாற்றுச் சான்றுகளுடன் எழுதப்பட்டு வரும் புதிய தொடர் இது. நம் இயக்கத் தோழர்கள் அனைவரும் தவறாமல் படித்திட வேண்டுகின்றேன்.

-பொறுப்பாசிரியர்

## தலைமறைவாகிவிட்ட 'தேசபக்தாள்'

**தொ**லைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றும்போதெல்லாம், தேசியக் கொடியைச் சட்டையில் குத்திக் கொண்டுதான் காட்சியளிப்பார் எஸ்.வி. சேகர். அவ்வளவு தேசபக்தி! வெளியில் தெரியும்படியாகத் தன் பூணூலையும் போட்டிருப்பார். அவ்வளவு சாதிவெறி.

இப்போது இரண்டு வாரங்களாக ஆளைக் காணவில்லை. அவசர வேலையாக எங்கோ தலைமறைவாகி விட்டாராம். தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்கிறது நம் காவல்துறை. மல்லையாவையும், நீரவ் மோடியையும்தான் கண்டுபிடிக்க முடியவில்லை. 'தேசபக்தாள்' எஸ்.வி.சேகரைக் கூடவா?



தேடுகின்றவர்களுக்கு ஒரு குறிப்பு இப்போது சட்டையில் தேசியக் கொடி இருக்க வாய்ப்பில்லை. பூணூலையும் கூடக் கழற்றி எறிந்திருக்க வாய்ப்புள்ளது.



## கருஞ்சட்டைத் தொலைக்காட்சி

நம் பேரவையின் சார்பில் இயங்கிவரும் 'கருஞ்சட்டைத் தொலைகாட்சி' (Karunchattai tv) யை, மக்களிடம் கொண்டு செல்லும் பணியை நம் தோழர்கள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். தொடர்ந்து அதனைப் பார்க்கும் (Suscribers) நண்பர்களின் எண்ணிக்கையை மிகுதியாக்கிட வேண்டும். ஓர் இலக்கம் நண்பர்களை நாம் எட்டினால்தான் நம் கருத்துகளை உடனுக்குடன் கொண்டு செல்ல இயலும். ஊடக உலகத்தில் வாழ்ந்து கொண்டுள்ள நாம், இவை போன்ற சமூக வலைத்தளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதன் மூலமே, அடுத்த தலைமுறையினரைச் சென்றடைய முடியும். கூட்டு முயற்சியால் மட்டுமே வெற்றி உறுதிப்படும். விரைந்து செயல்படுங்கள் தோழர்களே!

– சுப.வீரபாண்டியன்

## எதுவும் தெரியாத அமைச்சர்?

**ம**துரை விமானநிலையத்தில் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் –

தமிழகம், கேரளாவில் நடத்தப்படும் இரயில்வே பள்ளிகள் படிப்படியாக மூடப்படும் எனத் தெற்கு இரயில்வே சார்பில் சுற்றறிக்கை அனுப்பப் பட்டிருப்பதாகக் கூறப்படுவது குறித்து எனக்கு எதுவுமே தெரியாது.

நீட் தேர்வு மையங்கள் தொடர்பாகவும் எனக்கு எதுவும் தெரியாது.

– இப்படிக் கூறியிருக்கிறார். இவர்தான் இந்த நாட்டின் மத்திய அமைச்சர்.







# மாநில சுயாட்சி மாநாடு காலத்தின் தேவை!

● ச.பாலா

பேரறிஞர் அண்ணா வழங்கிய மாநில சுயாட்சிக் கொள்கையின் முக்கியத்துவத்தைப் பிற மாநிலங்கள், குறிப்பாக தென்னிந்திய மாநிலங்கள் உணரும் தருணம் வந்துவிட்டது. 15 வது நிதிக்குழுவுக்கு நடுவண் அரசு வழங்கியுள்ள ஆய்வு வரம்பு இதனை உறுதி செய்துள்ளது.

15 வது நிதிக்குழு மூலம் வளர்ச்சி அடைந்த தென் மாநிலங்களின் நிதி ஆதாரத்தை முடக்கும் வகையில் நடுவண் அரசு செயல்படுவதைக் குறிப்பிட்டு, அதனால் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம், தெலுங்கானா, கேரளா போன்ற மாநிலங்கள் எத்தகைய பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை விளக்கி பிரதமர் மோடிக்கும், நிதி அமைச்சர் அருண் ஜெட்லிக்கும் அனைத்துத் தென் மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும், ஒடிசா, மேற்கு வங்கம், டெல்லி மற்றும் பஞ்சாப் முதல்வர்களுக்கும் தமிழகச் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு.க. செயல்தலைவருமாகிய மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதனையடுத்து கர்நாடக, ஆந்திர முதல்வர்களும் நடுவண் அரசுக்கு எதிரான தங்களது நிலைப்பாட்டை விளக்கியுள்ளனர். இது தொடர்பாக கேரள முதல்வர் பினராயி விஜயனும் தென்னிந்திய நிதி அமைச்சர்களின் கூட்டத்தினைக் கூட்டியுள்ளார்.

மாநில அரசின் உரிமைகளைப் பாதுகாக்க, பிற மாநில முதல்வர்களை ஒன்றிணைக்கும் பணியை மேற்கொண்டுள்ளதைக் காணும் போது, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோர் காட்டிய, பயணித்த பாதைகளில் திராவிடச் சுடரை ஏந்தி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பீடுநடை போடுகிறார் என்பதை வரலாற்றின் வாயிலாக நாம் உணர முடியும்.

பேரறிஞர் அண்ணா மறைந்த பிறகு தமிழக முதல்வர் பொறுப்பினை ஏற்ற தலைவர் கலைஞர், முதல்முறையாக 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தலைநகர் தில்லி சென்றார். அங்கே விமான நிலையத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்கள் தலைவரிடம் கேள்விக் கணைகளை தொடுத்தனர். “உங்களின் தில்லிப் பயண நோக்கம் என்ன?” என்று ஒரு பத்திரிக்கையாளர் கேட்டதற்கு, ”மாநிலங்களுக்கான அதிகாரங்கள் அனைத்தும் தில்லியில் குவிந்து கிடக்கின்றன. அதை மீட்டெடுப்பது தான் என்னுடைய பயண நோக்கம்” என்றார். மேலும், மையமாநில உறவுகள் தொடர்பாக ஆராய்ந்து, மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்கள் எவை என்பதைக் கண்டறிய நிபுணர்கள் குழு ஒன்றினைத் தனது அரசு அமைக்கும் என்பதையும் பத்திரிக்கையாளர்களிடம் உறுதிபடத் தெரிவித்தார். பிறகு தமிழ்நாடு திரும்பிய கலைஞர், அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் ராஜமன்னார் அவர்கள் தலைமையிலான மூவர் குழுவை அமைப்பதாகத் தமிழகச் சட்டமன்றத்தில் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து அறிஞர் அண்ணாவின் நினைவை அனுசரிக்கும் வகையில் 1970 ஆண்டு பிப்ரவரி மாதம் திருச்சியில் நடைபெற்ற திமுக மாநாட்டில் "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்ற உயர்ந்த தத்துவத்தினை இந்தியாவுக்குத் தந்தார்.

அதனைத் தொடர்ந்து மாநில சுயாட்சிக் கொள்கையைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கில் சென்னையில் மாநில சுயாட்சி மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்தினார் கலைஞர். தந்தை பெரியார், காயிதே மில்லத், அப்போதைய மேற்கு வங்க முதல்வர் அஜய் முகர்ஜி, பின்னாளில் குடியரசுத் தலைவரான பிரணப் முகர்ஜி, சோசியலிஸ்ட் தலைவர் அரங்கில் சிரிதரன், எஸ்.எம்.கிருஷ்ணா போன்ற தலைவர்களும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாநாட்டில் கலந்து கொண்டு மாநில சுயாட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர்.

மாநில சுயாட்சி பற்றி நமது இனமானப் பேராசிரியர் கூறும்போது, ஒரு கடிகாரத்தின் முட்களில் மணிமுள் முதன்மையுடையது, எனினும், நிமிட முள் பேரளவு இயங்கினால் தான் மணி முள் சிறிதளவு இயங்கும் என்பது முறை. அதைப்போலவே மாநில மக்களோடு நெருக்கமாக இருக்கும் மாநில அரசு பேரளவு இயங்க இடம் தந்து, நடுவண் அரசு அதற்கு இணக்கமாக அளவுடன் இயங்கும் நிலையே, மக்களாட்சியின் சிறந்த நெறி என்று கூறினார்.

அடுத்ததாக வி.பி.சிங் அவர்கள் பிரதமரான பிறகு மாநிலங்களுக்கிடையேயான குழு (Inter-state council) உருவாக்கப்பட்டது. அண்ணாவின் கனவை நினைவாக்க அயராது உழைக்கும் தலைவர் கலைஞர் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்த போது, 2007ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் ஆளுநர் உரையில், மாநில சுயாட்சி கொண்டு வர திமுக அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டது. பிறகு 2009ஆம் ஆண்டு கழகம் நடத்திய அண்ணா நூற்றாண்டு விழாக்களில் மாநில சுயாட்சி இலட்சியத்தை நிறைவேற்ற தொடர்ந்து போராடுவோம் என்று சூளுரைத்தார்.

பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய மூவரையும் தன் சிந்தையில் நிறுத்தி, அவர்கள் காட்டிய வழியில் ஓய்வறியாமல் உழைத்து, எதிர்க்கட்சித் தலைவராகத் தமது பணியினைத் திறம்பட ஆற்றிக்கொண்டிருக்கும் திமுக செயல் தலைவர் மாநில சுயாட்சிக்கான கொள்கைச் சுடரைத் தற்போது தமது கையில் ஏந்தியுள்ளார்.

"தி.மு.க அதன் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் எல்லைக்குள்ளாகவே சுருக்கிக் கொள்ள நினைக்கலாம். ஆனால் திமுக உணர்வு இந்திய யூனியனில் உள்ள ஒவ்வொரு மாநிலத்தையும் கட்டாயம் சூழ்ந்து கொள்ளத்தான் போகிறது. மாநில சுயாட்சியும், அதிக அதிகாரம் கேட்கும் கோரிக்கையும் காலப் போக்கில் இளந்தலைமுறையினரையும், செயல் திறன் கொண்ட அரசியல் தலைவர்களின் சிந்தனையையும் கவரப்போவது நிச்சயம்." என்று உத்தரப் பிரதேசத்தை சேர்ந்த பேராசிரியை பிரபா ராஸ்டோகி 'இந்திய அரசியல் கட்சிகள்' என்ற தலைப்பில் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளில் தி.மு.க.வைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களது கடிதம் பிற மாநில முதல்வர்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தையும், அதற்கு ஆதரவாக அவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் பார்க்கும்போது உத்தரப் பிரதேச பேராசிரியையின் கூற்று உண்மையாகிவிட்டதையே காட்டுகிறது.

சமீபத்தில், தி. மு. கழகம் நடத்திய ஈரோடு மண்டல மாநாட்டில் 50 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதிலும் குறிப்பாக மாநில சுயாட்சிக் கொள்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதோடு பா. ஜ. க வின் கைப்பாவையாக உள்ள தற்போதைய அ.தி.மு.க அரசு மாநில உரிமைகளை அடகு வைக்கும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக மிகப் பெரிய மக்கள் போராட்டத்தையும் நடத்தப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மார்ச் 27 அன்று ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களை ஆளுநர் மாளிகையில் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு இருக்கும் போது, மாவட்டங்களுக்குச் சென்று அதிகாரிகளுடன் ஆளுநர் ஆய்வு நடத்துவது மாநில சுயாட்சிக்கு எதிரானது என்பதைச் சுட்டிக்காட்டினார். அதற்கு ஆளுநர் கொடுத்த விளக்கம் ஏற்புடையதாக இல்லாததையடுத்து, ஆய்வு மேற்கொள்ளவில்லை என்பதை ஆளுநர் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் அல்லது தமிழக அரசு சார்பில் அறிவிப்பு வர வேண்டும். இல்லையென்றால் மாநில சுயாட்சியைப் பாதுகாக்க தி.மு.க. தொடர்ந்து போராடும் என்று ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாநில சுயாட்சிக் கொள்கைக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, போராட்டங்களை நடத்தும் தமிழக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல மாநில முதல்வர்களையும், தலைவர்களையும் அழைத்து, 1970ல் தலைவர் கலைஞர் நடத்தியதைப் போல, தமிழகத்தில் மாநில சுயாட்சி மாநாட்டைத் தலைமை ஏற்று நடத்துவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை. ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.